2. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(இ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, பொதுக் கணக்குக் குழு, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி பற்றி மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் அவர்கள் லீடர் ஆஃப் தி ஹௌஸ், கல்வி அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின் கீழ் 1967--68-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினன்கு உறுப்பினர்களை, மதிப்பிற்குரிய சபாநாயகர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்", என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது இந்த சபை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்கவேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர்கள் "ஆம்" என்று குரல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் (ஆம் என்ற குரல்கள்.) எதிர்ப்பவர்கள் இருந்தால் என்று சொல்லுங்கள். "இல்லை" "இல்லை" என்பவர்கள் இல்லை). மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கிறேன்.

3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

(இ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழு தேர்தல் ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத்தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத்தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 25—3—1967 சனிக்கிழமை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு, அதாவது பதினன்குக்கு மேற்படுமாயின் 27—3—1967 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.